# பத்திரிக்கை செய்தி

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு அரசின் மின் ஆளுமை விருது வழங்க அரசானை எண் 5 தகவல் தொழில் நுட்பம் (B3) நாள் 26.02.2015 ல் ஆணையிடப்பட்டுள்ளது.

"மக்களுக்காக சேவைகளை ஏற்று நடத்த மென்பொருள் பயன்பாடுகளை உருவாக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோரின் சமூகப் பொறுப்புணர்வை மதித்து அங்கீகாரம் செய்யும் வகையில் தமிழ்நாடு மின் ஆளுமை சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மின் ஆளுமை விருது கோப்பைகள் வழங்கப்படும். 2015-16 ஆம் ஆண்டிற்க்கான விண்ணப்பங்கள் தற்போது வரவேற்க்கப்படுகிறது. பதிவு செய்ய விருப்பம் உள்ளவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மூன்று பிரிவுகளில் பதிவு செய்யலாம். ஒவ்வொரு பிரிவிலும் முதலில் வரும் இரண்டு நிறுவனங்களுக்கு, தொழில் முனைவோருக்கு மின் ஆளுமை விருது கோப்பைகள் வழங்கப்படும். மேலும், அவர்களால் தயாரிக்கப்பட்ட மென்பொருள்களை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்படும்"

1. Best e-Governance application for Agriculture/ Education/ Healthcare
2. Best e-Governance Application for Citizen Services
3. Best e-Governance Application for General Technological Innovation

மேற்படி விருதுக்கு இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தகுதி உடையவர்கள் www.tnega.in இணையதளத்தை பார்த்து விண்ணப்பங்களை பதிவு செய்யுமாறு **கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

மாவட்ட ஆட்சியர்